
# 14.செயின்ட் கிட்சும் நெவிசும்

இ.ஜே.சுந்தர்






அமெரிக்கக் கண்டத்தில் உள்ள 55 நாடுகளில் மிகப்பெரியது கனடா; மிகச்சிறிய தனிநாடு இன்னும் நம்மில் பலர் கேட்டறியாத செயின்ட் கிட்சும் நெவிசும் ஆகும். அளவில் மட்டுமன்றி மக்கள் தொகையிலும் தனிநாடுகளில் இதுவே சிறியதாகும். இந்த நாடு அமைந்திருக்கும் புவியியல் சூழலை முதலில் நாம் தெரிந்துகொள்வோம்.

வட அமெரிக்காவின் தென் கிழக்கே, தென் அமெரிக்காவின் வடக்கே, மத்திய அமெரிக்காவின் கிழக்கே உள்ள கரிபியன் கடல் பகுதியில் 7000 தீவுகள் பரவிக்கிடக்கின்றன. இந்தத் தீவுகளை இணைத்தும், விலக்கியும் 28 நாடுகள் இன்று தனிக்கொடியுடன் புவிப்பந்தில் மிளிர்கின்றன. இவற்றில் 13 நாடுகள் சுயாட்சியுடைய தனிநாடுகள். 15 நாடுகள் ஐக்கிய அமெரிக்கா, பிரிட்டன், பிரான்ஸ், நெதர்லாந்து முதலிய நாடுகளில் ஒன்றின் ஆட்சிக்கு உட்பட்ட இன்னும் விடுதலை பெறா நாடுகள். இந்தியாவுடன் கிரிக்கெட் விளையாட

வரும் மேற்கிந்திய தீவு அணியை நாம் அறிவோம். மேற்கிந்திய தீவு என்பது ஒரு நாடல்ல. பல நாடுகளின் தொகுதியான இந்த 7000 தீவுக்கூட்டங்களே மேற்கிந்திய தீவுகள் என அழைக்கப்படுகின்றன. இங்குள்ள பல நாடுகளிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட விளையாட்டு வீரர்களே ஓர் அணியாக மேற்கிந்திய தீவு என்ற பெயரில் விளையாட வருகின்றனர். கரீபியன் கடலில் 27,54,000 கி.மீ பரப்பில் அமைந்துள்ள இந்த நாடுகளில் மட்டும் 3,63,14,000 மக்கள் வாழ்கின்றனர்.



தேசியக் கொடி

269 சதுர கி.மீட்டர் பரப்பில் வெறும் 56,000 மக்களைக் கொண்ட இந்த செயின்ட் கிட்சும், நெவிசும் என்ற நாடு அளவிலும் பரப்பிலும் மட்டுமன்றி, பலவிதங்களிலும் தனித்தன்மை வாய்ந்தது. ஆங்கிலேயர்களின் முதல் குடியேற்ற நாடு இதுதான். மேற்கத்திய தீவுகளின் குடியேற்ற நாடுகளின் தாயாக செயின்ட் கிட்சும், நெவிசும் உள்ளது. மேற்கத்திய தீவுகளின் ஜிப்ரால்டர் என அழைக்கப்படும் இந்நாடே கரிபியன் பகுதியில் உள்ள பழைய குடியேற்ற நாடாகும். மேலும் முற்றிலும் தனிநபர் வருமான வரியோ, மூலதன ஆதாய வரியோ அறவே இல்லாமல் நிம்மதி தரும் நாடு இது.



கிறிஸ்டபர் கொலம்பஸ்

1493 இல் கொலம்பஸ் தம் இரண்டாவது கடற்பயணத்தில் ஓர் அழகிய தீவைக் கண்டறிந்து தம் பாதுகாவலரான புனிதர் கிறிஸ்டபர் பெயரில் இதனைக் செயின்ட் கிறிஸ்டபர் தீவு என்று அழைத்தார். பின்னர் கிறிஸ்டபர் சுருக்கப்பட்டு கிட்ஸ் ஆனது. அடுத்து உள்ள நெவிஸ் தீவு கொலம்பஸ் வந்துபோது பனிமூடி இருத்ததால் ரோமில் நடந்த பனிமயமாதா நிகழ்வை நினைவுகூர்ந்து அவர் ஸ்பானிஷ் மொழியில் வைத்த பெயரே நெவிஸ் ஆனது. ஐரோப்பியர் வருகைக்கு 5000 ஆண்டுகளுக்கு முன்பே அமெரிக்க பழங்குடி மக்கள் இங்கு வாழ்ந்து வந்துள்ளனர். தொடர்ந்து நடந்த பழங்குடியினர் குடியிருப்பில் இறுதியாக கலிநாகோ என்ற இனத்தினர் கொலம்பசிற்கு 300 ஆண்டுகளுக்கு முன்பே இங்கு குடியேறி வாழ்ந்து வந்தனர். குடியேற வந்த ஐரோப்பியர்களால் பழங்குடிமக்கள் கிட்டத்தட்ட

அனைவரும் கொல்லப்பட்டனர் அல்லது விரட்டப்பட்டனர். 1538 இல் ஸ்பானிஷ்காரர்களை அழித்து பிரஞ்சுக்காரர்கள் இங்கு குடியேற்றங்களை ஏற்படுத்தினர். 1623 இல் ஆங்கிலேயர்கள் நுழைந்து பிரஞ்சுக்காரர்களுடன் 100 ஆண்டுகள் போர்புரிந்து இதனைக் கைப்பற்றினர்.1626 இல் மட்டும் ஆங்கிலேயர்கள் 2000 உள்நாட்டு பழங்குடியினரைக் கொன்றொழித்தனர். பின் கரும்புத்தோட்டங்களில் பணியாற்ற ஆப்பிரிக்கர்கள் அடிமைகளாகக் கொண்டு வரப்பட்டு இந்நாட்டினைச் செழிப்பாக்கினர்.



கிட்சின் தென்கிழக்கு தீபகற்ப பகுதியிலிருந்து நெவிஸ் தீவின் தோற்றம்

பக்கத்தில் உள்ள அங்குல்லா தீவுடன் இணைந்து மூன்று தீவுகளும் மேற்கிந்திய தீவு கூட்டணியில் 1958 முதல் 1962 வரை இருந்தன. 1967 இல் பிரிட்டனின் ஒரு பகுதியாக கிட்ஸ்- நெவிஸ்- அங்குல்லா மாறியது. 1980 இல் அங்குல்லா தீவு தனிநாடாக உடைந்து வெளியேறியபின், 19.09.1983 இல் மற்ற

இரு தீவுகளும் இணைந்து பெடரேஷன் ஆப் செயின்ட் கிறிஸ்டபர் அண்டு நெவிஸ் (**Federation of Saint Christopher and Nevis)** என்ற அதிகாரப்பூர்வமான பெயரில் விடுதலை பெற்ற புது நாடானது. கிட்ஸ் தீவையும் நெவிஸ் தீவையும் 3 கி.மீ அகலமுள்ள கால்வாய் பிரிக்கிறது. கிட்டத்தட்ட அரச இலை வடிவமுடைய கிட்ஸ் தீவு வட்ட வடிவ நெவிசைவிட அளவிலும் மக்கள்தொகையிலும் பெரியது. கிட்டியர்கள், நெவிசியர்கள் என்று இருதீவினரும் அழைக்கப்படுகின்றனர்.



**எரிமலை விளைவித்த அழகிய குன்றுகள்**

இரண்டு தீவுகளும் எரிமலைக்குழம்பால் உருவானவை. வெப்பமும், ஈரப்பதமும் மிகுந்தவை. ஒருபுறம் வெள்ளை நிறக்கடற்கரையும், மறுபுறம் எரிமலைக்குழம்பு விளைவித்த கறுப்பு நிறக் கடற்கரையும் மாறுபட்டுத்தோன்றுவது கொள்ளை அழகாகும். கிட்சில் உள்ள 3792 அடி உயர லியாமுய்கா மலையும், நேவிசில் உள்ள 3232 அடி உயர நேவிஸ் சிகரமும் தீவுகளின் நடுவே எரிமலைக்குழம்புகளால் உருவான அழகிய மலைகளாகும்.



**தலைநகர் பசெடெரே**

நாட்டின் தலைநகர் பசெடெரே கிட்ஸ் தீவில் அமைந்துள்ளது. கிழக்குக் கரிபியனின் பழம்பெரும் நகரான பசெடெரேயில் 13,000 மக்கள் வாழ்கின்றனர். கரிபியன் நகரங்கள் எவற்றையும் விட இந்நகருக்கு சோகமான வரலாறு உண்டு. காலனி ஆதிக்கப்போர்கள், நிலநடுக்கம், வெள்ளம், போராட்டங்கள், சூறாவளி இவற்றால் பலமுறை இந்நகரம் அழிந்து எழுந்துள்ளது. பேரிடர்களைக் கடந்து இன்னும் பல பழைய கட்டடங்கள் இந்நகரில் பாதுகாக்கப்பட்டு வருவது வியப்பிற்குரியதே



**தலைநகரில் அரசு இல்லம்**

இந்நகரில் ஓடும் காலேஜ் ஆறு, வெஸ்ட்போர்ன் ஆறு ஆகியவை ஆண்டின் பெரும்பாலான நாள்களில் வறண்டே இருக்கும். புறநகரில் இந்நதிகள் சாலைகளாகவே பயன்படுத்தப்படுகின்றன. ஆனால் இதே காலேஜ் ஆற்றில்

பெரும் வெள்ளப்பெருக்கும் ஏற்பட்டு பேரழிவுகளும் நிகழ்ந்ததுண்டு. 1998 இல் ஏற்பட்ட ஜார்ஜ் சூறாவளி நாட்டிற்கு $ 45,80,00,000 பேரிழப்பை ஏற்படுத்தியது.




சார்லஸ் டவுன் நுழைவு



சர்லஸ் டவுனின் முக்கிய வீதி

12,000 மக்கள் வாழும் நெவிஸ் தீவின் பெரிய நகரம் 1500 பேர் வாழும் சார்லஸ் டவுன் ஆகும். ஐக்கிய அமெரிக்க நாட்டினை உருவாக்கிய முக்கியமானவர்களில் ஒருவரானவரான அலெக்சாண்டர் ஹாமில்டன் பிறந்து வளர்ந்த நகரம் இது. நெவிஸ் தீவில் பெரும்பாலும் கறுப்பர்களே வாழ்கின்றனர்..



நெவிஸ் சிகரத்தின் மீது பண்ணை வீடு

பழங்கால கட்டடங்கள், பெரிய வீடுகள், பண்ணைகள் மிகுந்த இத்தீவில், கிட்ஸ் தீவைவிடப் பணக்காரர்கள் மிகுதி. 1774-இல் இத்தீவில் 11,000 பேர்கள் இருந்தனர். அதில் 10,000 பேர் அடிமைகள். 1000 பேர் வெள்ளையர். இப்போது 1000 பேர் மட்டுமே கூடுதலாகியுள்ளனர். ஆனால் யாரும் அடிமைகள் இல்லை. உலகின் 10 சிறந்த தேனிலவு மையங்களில் நெவிஸ் 3வது இடத்தில் உள்ளது. திருமணங்கள் நிகழ்த்த சிறந்த இடமாகவும் கருதப்படுகிறது. திருமணம்-தேனிலவு இணைத்த சுற்றுலா திட்டங்களை இங்கு சில சுற்றுலா நிறுவனங்கள் வழங்குகின்றன. நெவிஸ் தீவு கிட்சுடன் உள்ள உறவை முறிக்க விரும்பி 1998 இல் வாக்கெடுப்பு நடந்தது.. இதில் 62% மக்கள் தனியாகப் பிரிய வாக்களித்தனர். அரசியல் சட்டப்படி 2/3 பெரும்பான்மை இல்லாமையால் இப்பிரிவு சாத்தியமில்லாமல் போனது.

காலனி ஆதிக்க காலத்திலிருந்து கரும்பு உற்பத்தி நாட்டின் பொருளாதாரத்திற்கு அடித்தளமாக விளங்கி வந்தது. 1975 இல் அரசு கரும்பு பண்ணைகளைத் தேசியமயாக்கியது. மறுஆண்டு சர்க்கரை ஆலைகளும்

அரசால் வாங்கப்பட்டன. எதிர்பாரா வகையில் 1986-89 காலக்கட்டத்தில் சர்க்கரை விலை வீழ்ச்சியடைந்தபோது நிலைமையைச் சமாளிக்கமுடியாது அரசு சர்க்கரை நிர்வாகத்தை 1991 இல் பிரிட்டனில் உள்ள தனியார் நிறுவனத்திடம் ஒப்படைத்தது. உலக வங்கியிலிருந்து 1.9 மில்லியன் டாலர் கடன் வாங்கி நிலைமை சமாளிக்கப்பட்டது. இந்தச்சூழலிலும் 2004 இல் சர்க்கரை உற்பத்தி 1,93,000 டன்னாக விளங்கியது. எனினும் தொடர்ந்து நட்டம் ஏற்பட்டதால் அரசு சர்க்கரை ஆலைகளை மொத்தமாக மூடியது. அதற்கு மாற்றாகச் சுற்றுலாத் துறையில் தம் கவனத்தைத் திருப்பியது. பாதி சுற்றுலா பயணிகள் அமெரிக்கர்கள். செப்டம்பர் 11 நிகழ்ச்சிக்குப்பின் அமெரிக்கர்கள் சுற்றுலா வருவது குறையவே அதை தூக்கி நிறுத்த பிரதமர் ஓர் அறிவிப்பு வெளியிட்டார். நியூயார்க், வாஷிங்டன் நகர தீயணைப்பு வீரர்கள், காவல்துறையினர் ஆகியோர் இலவசமாக ஒருவாரம் செயின்ட் கிட்ஸ்-நெவிசில் சுற்றுலா செய்யலாமென்ற கவர்ச்சிகரமான அறிவிப்பு பலனளித்தது. தற்போது ஆண்டுக்கு ஏறத்தாழ 70,000 பேர் இந்நாட்டிற்குச் சுற்றுலா வருகின்றனர்.



**தலைநகரின் நவீன வானூர்தி நிலையம்** இரண்டு வானூர்தி நிலையங்களில் தலைநகரில் உள்ள நிலையம் அனைத்துலக விமானங்கள் வந்திறங்கும் வண்ணம் நவீனமாக்கப்பட்டுள்ளது.



. .பிரிம்ஸ்டோன் மலை


பிரிம்ஸ்டோன் மலைக்கோட்டை


பிரிம்ஸ்டோன் மலைக்கோட்டை உள்தோற்றம்

யுனெஸ்கோ மரபுச்சின்னமான பிரிம்ஸ்டோன் மலைக்கோட்டை பிரிட்டிஷ் இராணுப் பொறியாளர்களால் வடிவமைக்கப்பட்டு ஆப்பிரிக்க அடிமைகளால் கட்டப்பட்டுப் பாதுகாக்கப்பட்டதாகும். இக்கோட்டை இங்குள்ள சிறந்த சுற்றுலாத்தலமாகும். 750 அடி உயரத்தில் கரிபியக்கடலுக்கு மேலே இது செம்மாந்து நிற்கிறது. 1690 இல் கட்டத்தொடங்கி, இதை முடிக்க 100 ஆண்டுகள் ஆயின. 1985 இல் இது புதுப்பிக்கப்பட்டு, இரண்டாம் எலிசபெத் அரசியால் தொடங்கிவைக்கப்பட்டு தேசிய பூங்காவாகவும் விளங்குகிறது.

சுற்றுலாவைத்தவிர மின்னணு பொருள்கள், இணைப்புத் தொழில்கள் இவற்றிலும் இந்நாடு மிகவும் முன்னேறி இத்துறையில் கிழக்கு கரிபியனில் தலைசிறந்ததாகத் திகழ்கிறது. தனிநபர் வருவாய் ஆண்டுக்கு int$ 24,508 ஆக உள்ளது. அதாவது 185 உலகநாடுகளில் 50 வது இடத்தில் உள்ளதால் இதனைப் பணக்கார நாடு என்றே கொள்ளலாம். காமன்வெல்த் நாடு, ஐநா சபை உறுப்பினர், உலக வங்கி உறுப்பினர், முக்கிய உலக அமைப்புகளின் உறுப்பினர் என்ற தகுதிகள் பலவும் இக்குட்டி நாட்டிற்கு உண்டு.

இந்நாட்டு மக்களில் பெரும்பாலோர் கரும்புத்தோட்டங்களில் பணியாற்றவந்த மேற்கு ஆப்பிரிக்க அடிமைகளின் வழித்தோன்றல்களே. இன்று 90.4% கறுப்பர்களும், 5% கலப்பினத்தவரும், 3% தெற்கு ஆசியர்களும், 1% வெள்ளையரும், 0.6% பிற மக்களும் கூடி இந்நாட்டில் வாழ்கின்றனர். பெரும்பாலான மக்கள் கிறித்துவ மதத்தினர். அதில் 50% ஆங்கிலிகன் சபையினர்; 25% ரோமன் கத்தோலிக்கர்; எஞ்சியோர் பிற கிறித்துவ சபைகளைச்சார்ந்து உள்ளனர். ஆங்கிலமே பேச்சு, கல்வி, நிர்வாக மொழியாக உள்ளது. சராசரி ஆயுள்: 75.29. 5 வயது முதல் 16 வயது வரை பள்ளிக்குச்சென்றாக வேண்டும் என்ற கட்டாயம் உள்ளது. எனவே மக்களின்

எழுத்தறிவு 98% ஆக சிறந்துள்ளது. தொடக்கப்பள்ளியில் 17 மாணவர்களுக்கு ஓர் ஆசிரியர் என்ற விகிதமும், நடுநிலைப்பள்ளியில் 10 மாணவர்களுக்கு ஓர் ஆசிரியர் என்ற விகிதமும் பாராட்டும்படியாக உள்ளது. மருத்துவம் தொடர்பான 3 பல்கலைக்கழகங்கள் உட்பட இச்சிறிய நாட்டில் 6 பல்கலைக்கழகங்கள் ஒளிர்கின்றன. கிழக்கு கரிபிய டாலர் இந்நாட்டிற்கும் நாணயமாக ஏற்கப்பட்டுள்ளது.



முடிவெட்டும் கிட்ஸ் பெண்கள்

வேளாண்மையே மக்களின் முக்கிய தொழிலாக உள்ளது. நாட்டின் 22% நிலம் விவசாய நிலம். கரும்பை அடுத்து, சிறு விவசாயிகளால் வேர்கடலை, கடற்தீவு பருத்தி, சர்க்கரை வள்ளிக்கிழங்கு, வெங்காயம், தக்காளி, முட்டைக்கோஸ், காரட், ரொட்டிப்பழம் முதலியவை பயிரிடப்படுகின்றன. இந்த விவசாயப்பொருள்கள் 19.6% ஏற்றுமதியாயினும், பிற தேவைக்காக 35.2% பிற நாடுகளிலிருந்து இறக்குமதியும் ஆகின்றன. ஏற்றுமதியில் 57.5% அமெரிக்காவிற்குச் செல்கிறது. இறக்குமதியில் 44.7% உக்ரைனிலிருந்து வருகிறது.

இங்கிலாந்தின் சட்டத்தை அப்படியே இந்நாடு பின்பற்றுகிறது. நாடாளுமன்ற மக்களாட்சி நடைபெறும் நாடாயினும், நாட்டின் தலைவியாக இங்கிலாந்து அரசியார் இரண்டாம் எலிசபெத் விளங்குகிறார். அவர் சார்பில் ஆளுநர் நாயகம் (**Governor-General** ) செயல்படுகிறார். ஆனால் முக்கிய அதிகாரம் பிரதமருக்கே. அமைச்சரவை 14 உறுப்பினர்களைக்கொண்டது. 11 பேர் தேர்தல் வழியாகத் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர் *(இதில் 3 பேர் நெவிஸ் தீவிலிருந்து)* மீதி 3 பேர் ஆளுநர் நாயகத்தால் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர். இந்த 3 பேரில் இருவரை பிரதமர் பரிந்துரைப்பார்; மற்றவரை எதிர்க்கட்சித்தலைவர் பரிந்துரைப்பார். 5 ஆண்டுகளுக்கு ஒருமுறை தேர்தல் நடைபெறும். மக்களின் உழைப்பாளர் கட்சி, மக்கள் செயல்பாட்டு இயக்கம்,

நெவிஸ் சீர்திருத்த கட்சி, குடியிருப்போர் அமைப்பு என இங்கு 4 கட்சிகள் உள்ளன.



பிரதமர் திமோதி ஹாரிஸ்

நீண்ட காலம் ஆளுநர் நாயகமாக இருந்த சர் கத்பேர்டு செபஸ்டீன் 2013 இல் ஓய்வு பெற்று கிட்ஸ்- நெவிஸ்- அங்குல்லா தேசிய வங்கியின் நிர்வாக இயக்குநரும் பொருளாதார வல்லுநருமான சர் எட்மண்ட் லாரென்ஸ் அப்பதவியை ஏற்றார். அவரும் ஈராண்டுகளுக்குள் பிரதமரின் தலையீட்டால் பதவி விலகி,தற்போது சர் தப்லே சியாட்டன் ஆளுநராக உள்ளார். 20 ஆண்டுகளுக்கு மேல் பிரதமராக இருந்த டென்சில் டக்லஸ் எதிர்க்கட்சிகளின் நெருக்குதலாலும், தம் கட்சியின் உட்பூசலாலும், 2015- இல் சிறு வாக்கு வித்தியாசத்தில் பதவி இழக்க அவ்விடத்தில் மக்களின் உழைப்பாளர் கட்சி தலைவர் டாக்டர் திமோதி ஹாரிஸ் தற்போது நாட்டின் பிரதமராகியுள்ளார். பதவிகளைப் பெறுவதும், தக்கவைத்துக்கொள்வதும், இழப்பதும் எல்லா நாடுகளிலும் ஒரே மாதிரியாகத்தான் உள்ளது.

இந்நாட்டு இராணுவத்தில் 300 பேர் மட்டுமே உள்ளனர். அண்டை நாடுகள் எவற்றுடனும் இதற்குப் பிரச்சினையில்லை. எனவே காவல் காக்கவும், போதைப்பொருள் கடத்தலைத் தடுக்கவும் இராணுவம் பயன்படுத்தப்படுகிறது.


செயின்ட் கிட்ஸ்- நெவிஸ் வாழ் இளையோர்

திருமணம் செய்வது சமூக பொறுப்புடன், வயது வந்தமையின் அடையாளமாகக் கருதப்படுகிறது. பெற்றோர்கள் பெண் பிள்ளைகளை வயது வந்தவுடன் திருமணத்திற்கு நிர்பந்திக்கின்றனர். காரணம் திருமணமாகாமல் கருவுற்றபெண்கள் எண்ணிக்கை கூடி வருகிறது. நாட்டில் உள்ள 20% குழந்தைகள் திருமணத்திற்கு வெளியே பிறந்தவை என்ற புள்ளிவிவரம் அதிர்ச்சிக்குரியதாகும்.


நெவிஸ் தீவில் திருமணக் கொண்டாட்டம்

அரசு குறிப்பிடும் திட்டங்களில் முதலீடு செய்தால் சில நிபந்தனைகளுக்கு உட்பட்டு எந்நாட்டினரும் இந்நாட்டில் குடியுரிமை பெறலாம். அரசு அறிவித்துள்ள குடியுரிமை முதலீட்டுத்திட்டம் பலரை இந்நாட்டிற்கு வர வசீகரிக்கிறது. அரசு இவ்வாறு அறிவிக்கிறது: *நீங்களும் உங்கள் குடும்பத்தினரும் ஆயுள் முழுவதும் குடியுரிமை பெறலாம். உங்கள் சந்ததியினருக்கும் இந்தக் குடியுரிமையை வழங்கலாம். உங்கள் குடும்பத்தினர் பெறும் கடவுச்சீட்டினால் ஐரோப்பிய யூனியன் உட்பட 130 உலக நாடுகளுக்கு விசா இன்றிச் செல்ல முடியும். நீங்கள் செயின்ட் கிட்சும் நெவிசும் நாட்டில் தங்கலாம் அல்லது நீங்கள் விரும்பும் கரிபியன் உறுப்பு நாடுகள் எவற்றிலும் எவ்வளவு நாளும் தங்கலாம்.*

**ஆனால் அரசு கேட்கும் முதலீடு ஏறத்தாழ ஆறரை இலட்சம் அமெரிக்க டாலர்.** *(வெற்றி வேந்தன்: நவம்பர் 2016)*

: